**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

# குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை

அம்மங்குடி ஹனுமத் உபாசகர், ஸ்ரீவைகானஸ ஜ்யோதிஷர்,
வி. லக்ஷ்மீநாராயண பட்டாச்சாரியார்.

நமது இந்து மதத்தில் குருவிற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஆன்மீகத்திலும், ஜோதிடத்திலும் குருவின் அருள் மிகவும் அவசியம். ஆன்மீகத்தில் எல்லா முறைகளிலும் முக்கியமாக உபாசனா மார்க்கத்தில் குருவின் அருள் மிக அவசியம். அதுபோல் ஜோதிடத்திலும் குருவின் அருள் மிக அவசியம். ''குரு பார்க்க கோடி நன்மை'' போன்ற ஜோதிட பழமொழிகள் குருவின் முக்கியத்துவத்தையும், பெருமையையும் உணர்த்தும். இதையே ஆதிசங்கரரும் தனது குருவஷ்டகத்தில் ''ஒருவனுடைய பாதத்தாமரைகள், பூமண்டலத்தில் உள்ள மன்னர்களாலும், பேரரசர்களாலும் எப்போதும் வணங்கப்பட்டாலும், குருவினுடைய திருவடித் தாமரைகளில் குவியவில்லையென்றால் என்ன பயன்? என வினவுகிறார். முக்கியமாக ஜோதிடத்தில் குருவின் பெருமையும், முக்கியத்துவமும் எவ்வளவு அவசியம் என்பதை இக்கட்டுரையில் அடியேன் எனது அறிவிற்கு எட்டியுள்ளதை எழுதி உள்ளேன்.

ஜோதிடத்தில் குருவின் பங்களிப்பு -

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வரிசைபடுத்திய நம் முன்னோர்கள் முதல், தாய் பிறகு இவர்தான் உன் தந்தை என்று அறிமுகம் செய்வதால் இரண்டாவது தந்தை. பிறகு இவர்தான் உனக்கு குரு என்று தந்தை நல்ல ஆசிரியரிடம் புதல்வரை ஒப்படைப்பதால் மூன்றாவது குரு. குரு பாடம் சொல்க் கொடுக்கும் போது இதுதான் தெய்வம். இதை வழிபட்டால் வரம் கிடைக்கும் என்று சொல்க் கொடுத்து நல்வழி படுத்துவதால் அடுத்து தெய்வம் இடம் பெறுகிறது. ஆகவே குருவின் அருள் இருந்தால் தான் திருவருள் கிடைக்கிறது.

குருபகவான் புத்ரகாரகன் என்றும், தனாதிபதி என்றும் அழைக்கப்படுகிறார். புத்திரர், பிரம்மா, ஞானம், யோகம், ஆசாரம், அஷ்டாமாசித்துகள், உபதேசம், அரச சன்மானம், தனம், ஒழுக்கம், வேதம், ச்ருதி ஸ்ம்ருதி, சாந்தம், சொர்ணம், புஷ்பராகம், தேன், கடலை, ரிஷிவர்க்கம், ராஜ்ஜியாதிபத்தியம் இவற்றிக்கு காரகம் வகிக்கிறார். குருபகவான் ஜீவனாதிபதியாக (தொழில்) வரும்பொழுது அறக்கட்டளை நிறுவுதல், அதில் பணிபுரிதல், கோவில் அர்ச்சகர், கல்வி நிறுவனங்களில் ஆசிரியர், பொதுமக்கள் சேவை, கோவில் நிர்வாக அலுவலர், வேதம் சார்ந்த படிப்பு இவற்றில் ஜீவனத்தை ஏற்படுத்துகிறார். குருபகவான் புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய மூன்று நட்சத்திரங்களுக்கு அதிபதியாவார். மீனம், தனுசு இவரது ஆட்சி வீடாகும். கடகத்தில் உச்சமாகும். மகரத்தில் நீசமும் பெறுவார். இவரது தசாகாலம் 16 ஆண்டுகள் ஆகும். இவருக்கு இறைவன், அந்தணன், மந்திரி, பொன், குரு, பூதகன், ஜீவன், வேதியன் என்ற சிறப்பு பெயர்கள் உண்டு. குரு நவகிரகங்களில் சுபரும், சாத்வீக குணமும் உடையவர் ஆவார். இவர் வாத சரீரம் உடையவரும் சமஸ்கிருத பாஷைக்கு

அதிபதியும், மஞ்சள் நிறத்தில் ப்ரீத்தி உடையவர் ஆவார். பிராமண வகுப்பை உடையவரும், வடக்குதிசை நோக்கி அமர்ந்திருப்பார்.

குரு பகவான் கடக லக்னகாரர்களுக்கு யோகாதிபதி ஆவார். துலாம், ரிஷப லக்னங்களுக்கு மாரகாதிபதி ஆகிறார். குருபகவான், 5,9, போன்ற இடங்களில் இருந்தால் சுபம். 1,4,7,10 ஆகிய கேந்திரங்களில் நின்றால் கேந்திராதிபத்திய தோஷம் ஏற்பட்டு தீமைகளை செய்வார். குரு பகவானுக்கு 5,7,9 பார்வைகள் சிறப்பு பார்வைகள் ஆகும். இவர் இருக்கும் இடத்தைவிட பார்க்கும் இடத்தின் ஸ்தான பலனை அதிகப் படுத்துவார். குருபகவான் தனியாக எந்த ஸ்தானத்தில் இருந்தாலும் சிறப்பான பலன்களை தரமாட்டார். முக்கியமாக 5ம் இடமாகிய புத்ரஸ்தானத்தில் தனித்து இருந்தால் புத்திர தோஷத்தையும், 2ம் இடமாகிய தனஸ்தானத்தில் இருந்தால் தன, பண சேர்க்கையில் விரயத்தை ஏற்படுத்துவார். குருபகவான் முக்கியமாக 2,5,9,10,11 ஆகிய பாவங்களுக்கு காரகம் வகிப்பதால் இவரது பலம் மிக முக்கியமாகும்.

குருவினால் ஏற்படும் யோகங்கள்.

கஜகேசரி யோகம் - சந்திரன் குருவிற்கு கேந்திரங்களிலோ, சமசப்தமமாகவோ, சேர்ந்தோ இருந்தால் இந்த யோகம் ஏற்படும். ஆனால் இவ்விரு கிரகங்களும் நீசம் அடையாமலும், பகை, மறைவு அடையாமல் இருக்க வேண்டும். இது யோகங்களில் சிறந்த யோகமாகும். இதனால் ஜாதகர் புத்தி கூர்மை உள்ளவராகவும், பலசாயாகவும், அறிவாளியாகவும், மதிப்புடையவராகவும், அரசாங்கத்தில் உயர்ந்த பதவி, அந்தஸ்து உடையவராகவும், நாட்டை ஆள்பவராகவும் இருப்பார்.

குரு சந்திர யோகம் குரு பகவான் சந்திரனை பார்த்தாலோ, சேர்ந்திருந்தாலோ இந்த யோகம் ஏற்படும். இதனால் அயல் நாட்டு தொடர்பும், பணிபுரியும் வாய்ப்பும் ஏற்படும். மேலும் செல்வம், செல்வாக்கு சேரும். சமூகத்தில் சிறந்த அந்தஸ்து ஏற்படும்.

குரு சண்டாள யோகம் - குரு ராகுவுடன் சேர்ந்து இருக்கும் போது இந்த யோகம் ஏற்படும். இதனால் செல்வம். உயரிய வாழ்க்கை, திடீர் பணவரவும் ஏற்படும்.

குரு கேதுவுடன் சேரும் பொழுது கோடீஸ்வர யோகம் ஏற்படும். இதனால் ஜாதகர் கோடிகளை சம்பாதிப்பார்.

சகட யோகம் குரு சந்திரனுக்கு 6, 8, 12-ல் மறையும் போது சகட யோகம் ஏற்படும். இதனால் வாழ்க்கையில் நிம்மதி இன்மையும், சக்கரம் போன்ற வீண் அலைச்சலும் ஏற்படும்.

பார்வை பட்டால் போதும் பொதுவாக கிரகங்களின் பார்வைக்கு விசேஷ பலன் உண்டு. அதிலும் குறிப்பாக குருவின் பார்வைக்கு தனிதன்மை உண்டு. லக்னத்தை குரு பார்த்தால் ஜாதகர் நியமநிஷ்டை உடையவராகவும், யாகங்களை செய்பவராகவும் அரசாங்கத்தால் மதிக்கப்படுவார். ஒரு ஜாதகத்தில் குருவானவர் பலம் பெற்று கேந்திரத்தில் இருந்தால் நீண்ட ஆயுளுடன் வாழ்வதுடன், மிகச்சிறந்த தனவான் ஆவார். லக்னத்தில் குரு இருப்பது ஆரோக்கியத்திற்கு உகந்ததாகும். உடல் பலம், மனோபலம் இரண்டும் பலம் பெறும். குருவுக்கு 5,9ல் உள்ள கிரகம் நல்ல பலனை

தரும். குருவுக்கு நேர் எதிரில் 7-ல் உள்ள கிரகம் அதிக நன்மை தரும். குரு 5-ல் அல்லது லக்னத்தில் இருக்க 10-ல் சந்திரன் இருந்தால் ஜாதகர் அதிபுத்திசாயாக திகழ்வார்.

ஒரு ஜாதகத்தில் 1,2,5,9,10,11 ஆகிய இடங்களில் பலம் பெற்ற குரு இருந்தால் ஜாதகத்தில் மற்ற கிரக தோஷங்களைப் பெருமளவு குறைப்பார். லக்னேசன் குருவுடன் சேர்ந்தால் சரீர ஆரோக்கியம் பெருகும். 2ம் அதிபதியுடன் சேரும்போது வாக்கு வன்மை, பொருள் வரவு, குடும்ப நலம் உண்டாகும். 3-ம் வீட்டோனுக்கு குரு சம்பந்தம் ஏற்படுமானால் சகோதர அபிவிருத்தி ஏற்படும். இதேபோல் அந்த ஸ்தானாதிபதியுடன் குரு சேர்ந்தாலோ (அ) பார்த்தாலோ அந்த ஸ்தானத்தின் நல்ல பலன்கள் அதிகரிக்கும். ஒருவர் பேச்சுத்திறமை பெற்றிருப்பதற்கு குருவானவர் புதனுடைய நவாம்சத்தில் இருந்தால் போதுமானது. அதுபோல் குருவர்க்கோத்துமம் அடைந்தால் அந்த ஜாதகர் விசேஷமான அறிவாற்றலை உடையவராக இருப்பார். நவகிரகங்களில் குருவுக்கு மிஞ்சிய சுபர் இல்லை. அவருடைய பார்வைபட்ட இடமெல்லாம் துலங்கும். சிலர் எந்த கவலையும் இல்லாமல் நிம்மதியாக வாழ்வர். அவர்களுடைய ஜாதகத்தில் குரு 9ம் இடத்திலோ (அ) அவ்விடத்தை பார்ப்பார். அவரது மனம் தரும குணத்தில் ஈடுபடுகிற காரணத்தால் கவலை இல்லாமல் இருப்பர். இதுபோல் குருவின் பெருமைகளை கூறினால் மிகையாகாது. ஜோதிடத்திலும், ஆன்மீகத்திலும் குருவின் பங்கு மிக முக்கியமாகும். ஆகவே அனைவரும் குருவின் அருளை பெற்று வாழ்வில் எல்லா வளங்களையும் பெறுவோமாக.

இந்த ஜோதிட கட்டுரையை எங்களது ஆசாரியர் நடார் ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே.ந.கோ.ஸ்ரீனிவாசபட்டாசாரியார் அவர்களுடைய சதாபிஷேக விழாவில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். எங்களது ஆசாரியர் நமது ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ரத்திலும், ஸ்ரீஒப்பியப்பன் கைங்கர்யத்திலும் தன்னை முழுவதுமாக அற்பணித்துக் கொண்ட மஹான் ஆவார். நமது ஆகம க்ரந்தங்களை (நவீன வசதி இல்லாத காலத்திலேயே) வெளியிட்டு ஸமூஹ சேவை செய்த மஹான் ஆவார். அந்த மஹானுடைய சதாபிஷேக விழாவில் இக்கட்டுரையை ஸ்ரீமத்விகனஸாசாரியர் பாதகமலங்களில் ஸமர்ப்பிக்கிறோம்.

லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து.

தாஸன்
வி.லெக்ஷ்மீ நாராயண பட்டாச்சாரியார்
(ஸ்ரீ ஹனுமத் உபாசகர்)
ஸ்ரீசீதாராம மாருதி ஜோதிட & திருமணத் தகவல் மையம்
அம்மன்குடி